**மாந்தை மேற்கு பிரதேச சபை**

---

**மன்னார் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 24 இல் சபையின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் திரண்ட நிதி மற்றும் ஒதுக்கத்தின் ஆரம்ப மீதியானது ரூபா 1,916,700 ஆல் அதிகரித்து கொண்டுவரப்பட்டுள்ளது.

**(ஆ)** மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 17 விடயங்களின் கூட்டு மொத்தத் தொகையான ரூபா 571,279 தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டில் சபையில் 18 விடயங்களிற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,187,388 செலுத்துவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இனங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) | |
| (i) விதி இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாக வள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கம் 178(3) | வழங்குனர்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி இலக்கம் 218 | காணிகள், கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறையேனும் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சோதனை செய்யப்படவேண்டியிருந்தும் அறிக்கையிடும் திகதி வரை சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| நிதி ஒழுங்குவிதி 371 | 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையில் பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையினால் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 175,741 ஆனது இதுவரை தீர்ப்பணவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 3,225,215 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 5,448,700 ஆக இருந்தமை நிதி விளைவுகளின் ரூபா 2,223,485 குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் நேரொத்த ஆண்டைவிட குறைவாக உயர்வடைந்தமையே ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையின் மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் ரூபா 11,416,793 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

#### 2.2.2 வாடகைகள்

சபைக்கு சொந்தமான கடை வருமான நிலுவைகள் ரூபா 861,689 அறவிடுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

--------------------------

பதிவாளர் நாயகத்திடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 11,078,437 முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

--------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள 04 தொலைதொடர்பு கோபுரங்களிற்கான அனுமதி கட்டணம் அறவிட ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் கிடைக்க வேண்டிய பல்வேறு வருமானங்களில் ரூபா 908,164 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------

**3.1 செயற்பாட்டு அறிக்கை**

----------------------------

மத்திய அரசு பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தியின் படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை சபையினால் செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------

**(அ) அடம்பன் விளையாட்டு மைதான முன்னேற்ற வேலை – 2015**

-------------------------------------------------------------------------------

குறித்த சில வேலைகளில் உண்மையாக செய்யப்பட்ட அளவினை விட, அளவுத் தாள் (Measurement Sheet) இல் கூடுதலாக காட்டப்பட்டு மேலதிக கொடுப்பனவு ரூபா 160,700 மேற்கொள்ளப்பட்டிருந்தது..

**(ஆ) குழாய்க்கிணறு, குடிநீர் வழங்கும் தாங்கி மற்றும் குழாய் பொருத்துதல் பெரியபண்டிவிரிச்சான்**

-------------------------------------------------------------------------------------------------------

(i) மேற்படி வேலைக்காக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் NP/14/42(1)/PSDG/MWPS/CTW & WT/2012 இலக்க 17/08/2012 யூன் திகதிய கடிதம் மூலம் திறந்த கேள்வி கோர அனுமதிக்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக கொள்வனவு முறை (Shopping Method) இல் கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ii) மேற்படி வேலைக்கான தொழில் நுட்ப வரைபடம் சமர்ப்பிக்கப்படாமல் குறித்த வேலையானது தொழில் நுட்ப குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

(iii) மேற்படி வேலையானது பெறுகைக் குழுவினரால் அங்கீகரித்து ஒப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்படி வேலையின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதற்கான விலை ஆய்வு சமர்ப்பிக்கப்படாமையால் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் குழாய் கிணறு பொருத்துதல் வேலைகளுக்காக முறையே ரூபா 650,000, ரூபா 200,000 தொகை மதிப்பீடு எந்த அடிப்டையில் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதினை அறியமுடியாதுள்ளது.

(v) மேற்படி வேலையின் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மதிப்பீட்டு விலையினை சந்தை விலையுடன் ஒப்பீடு செய்யப்பட்ட போது ரூபா 605,000 மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(vi) மேற்படி வேலைக்காக பொருத்தப்பட்ட மின்சார நீர் இறைக்கும் இயந்திரத்திற்கான உத்தரவாத அட்டை (Warranty card) ஒப்பந்தக்காரரால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) மேற்படி வேலைகள் 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் மின்சார இணைப்பு வழங்கப்படாமையினால் 2016 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டு காலப்பகுதியில் குறித்த நீர் வழங்கல் சேவையினை பெற வேண்டிய பயனாளிகளிற்கு எவ்வித பயனும் அற்று வீணான முறையில் காணப்பட்டது.

(viii) மேற்குறித்த வேலையின் குழாய்க்கிணறு, நீர் இறைக்கும் இயந்திரம் தனியார் ஒருவரின் வீட்டு வளவு எல்லைக்குள்ளேயே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**(இ) பெரியபண்டிவிரிச்சான் நீர்த்தாங்கி மேலதிக வேலை – 2012**

மேற்படி வேலைகளில் உண்மையான அளவினை விட அளவீட்டுத் தாளில் (Measurement Sheet) கூடுதலாக காட்டப்பட்டு ரூபா 100,810 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 38 மூலதன வேலைகளிற்காக ரூபா 13,200,027 பெறுமதியான செலவின ஒதுக்கீடுகள் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட 22 மூலதன வேலைகளிற்காக ரூபா 1,114,272 பெறுமதியான செலவின ஒதுக்கீடுகள் முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ)** சபையின் மீளாய்வாண்டு மதிப்பீட்டில் மதிப்பீடு செய்யப்படாது ரூபா 568,654 தொகையான 05 மூலதன செலவீனங்கள் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படடிருந்தது..

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) கணக்கீடு